# பாலகணபதி மந்த்ரம் - (18 தடவை)

(ஸகல ஸௌபாக்கியம் பெற, ஸகல சங்கடங்களும் தீர)

த்ரிநேத்ரம் த்விபுஜம் வாமனம்
முக்தா மணி விபூஷிதம் ।
பீதாம்பரதரம் தேவம்
வாமனம் விபும் ஆஸ்ரயே ॥

# ஹயக்ரீவர் மந்த்ரம் - (16 தடவை)

குழந்தைகள் கல்வி அறிவு பெற

ஞானானந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகா க்ருதிம் ।
ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹே ॥

# ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் மாலா மந்த்ரம் - (5 தடவை)

(கிரக பீடை, துஷ்ட தேவதையால் வரும் பீடைகள், கெட்ட சொப்பன பலன்கள் நீங்கப் பெற்று மனோ தைரியம், கீர்த்தி, நீண்ட ஆயுள் பெற)



ஓம் ராமதூதாய ஆஞ்சநேயாய
வாயு புத்ராய மஹா பலாய
ஸீதா துக்க நிவாரணாய, லங்கா விதாஹகாய
மஹா பலப்ரசண்டாய பல்குணஸகாய
கோலாஹல ஸகல ப்ரஹ்மாண்ட பாலகாய

ஸப்த ஸமுத்ர நிராலங்கிதாய,
பிங்கள நயனாய அமித விக்ரமாய
ஸுர்ய பிம்ப பலஸேவகாய, துஷ்ட நிராலம்பக்ருதாய
ஸஞ்ஜீவினி ஸமாநயந ஸமார்த்தாய அங்கத லக்ஷ்மண
கபி ஸைந்ய ப்ராண நிர்வாஹகாய

தஸகண்ட வித்வம்ஸனாய
ராமேஷ்டாய பல்குநஸகாய
ஸீதா ஸஹித ராமச்சந்த்ர
ப்ராஸதகாய ஷட் ப்ரயோகாங்க
பஞ்ச முகி ஹனுமதே நம:

# ஸ்ரீ ஆஞ்சநேயர் மூல மந்த்ரம்

அஸ்ய ஸ்ரீ ஹனுமான் மந்த்ரஸ்ய ராமச்சந்த்ரரிஷி: ׀ ஜகதீச் சந்த: ׀ ஹனுமான் தேவதா!
ஹ்ராம் பீஜம் ׀ ஹ்ரீம் சக்தி: ׀ ஹ்ரூம் கீலகம் ׀ ஹனுமான் ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக: ׀

ஹ்ராம் – அங்குஷ் டாப்யாம் நம: / ஹ்ருதயாய நம:

ஹ்ரீம் – தர்ஜனீப்யாம் நம: / சிரஸே ஸ்வாஹா

ஹ்ரூம் – மத்யமாப்யாம் நம: / சிகாயை வஷட்

ஹ்ரைம் – அனாமிகாப்யாம் நம: / கவசாச ஹூம்

ஹ்ரௌம் – கனிஷ்டிகாப்யாம் நம: / நேத்ரத் த்ரயாய வௌஷட்

ஹ்ர: – கரதலகர ப்ருஷ்டாப்யாம் நம: – அஸ்த்ராய பட்

பூர்புவஸ்ஸுரோமிதி திக்பந்த:

**த்யானம்**

**பாலார் காயுத தேஜஸம் த்ரிபுவன ப்ரக்ஷோபகம் சுந்தரம் ׀**
**சுக்ரீவாதி ஸம்ஸ்த வானர கணை: ஸம்ஸேவ்ய பாதாம் புஜம் ׀׀**
**நாதே கைவ ஸமஸ்த ராக்ஷஸ கணான் ஸம்த்ராஸயம்தம் ப்ரபும் ׀**
**ஸ்ரீமத் ராம பதாம்புஜ ஸ்ம்ருதி ரதம் த்யாயாமி வாதாத்மஜம் ׀׀**

**லமித்யாதி பஞ்சபூஜா**

**மூலமந்த்ரம்**

**ஓம் நமோ ஹரி மர்க்கட மாக்கடாய ஸ்வாஹா ׀**

**ஹ்ருதயாதி ந்யாஸ: ׀**
**பூர்புவஸ்ஸுரோம் இதி திக் விமோக: ׀**

**த்யானம்**

## லமித்யாதி பஞ்சபூஜா

லம் ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்பயாமி ׀ ஹம் ஆகாசாத்மனே புஷ்பாணி ஸமர்ப்பயாமி ׀
யம் வாயவ்யாத்மனே தூபமாக்ராபயாமி ׀ ரம் வஹ்ன்யாத்மனே தீபம்தர்ஸயாமி ׀
வம் அம்ருதாத்மனே அம்ருதம் நிவேதயாமி ׀ ஸம் ஸர்வாத்மேன ஸம்ஸ்தோபசாரன் ஸமர்ப்பாயமி ׀

## ஜப ஸமர்பணம்

**குஹ்யாதி குஹ்ய கோப்த்ரீத்வம் க்ருகா நாத்ம க்ருதம் ஜபம் ஸித்திர் பவதுமே தேவ த்வத் ப்ரஸாதாத் மயிஸ்திரா**

**׀׀ ஓம் தத்ஸத் ׀׀**

## த்வாதசாக்ஷரி ந்ருஸிம்ம மந்த்ர:

அஸ்ய ஸ்ரீ த்வாதஸாக்ஷரி ந்ருஸிம்ம மஹாமந்த்ரஸ்ய ׀
ப்ரும்மாரிஷி: ׀ அனுஷ்டப் சந்த: ׀ ஸ்ரீ ந்ருஸிம்ம தேவதாய நம: ׀
ந்ருஸிம்ம ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக: ׀

ஓம் உக்ரம் வீரம் – அங்குஷ் டாப்யாம் நம: / ஹ்ருதயாய நம:

மஹாவிஷ்ணும் – தர்ஜனீப்யாம் நம: / சிரஸே ஸ்வாஹா

ஜ்வலந்தம் ஸர்வதோமுகம் – மத்யமாப்யாம் நம: / சிகாயை வஷட்

ந்ருஸிம்மம் பீஷணம் – அனாமிகாப்யாம் நம: / கவசாச ஹும்

பத்ரம் ம்ருத்யு ம்ருத்யும் – கனிஷ்டிகாப்யாம் நம: / நேத்ரத் த்ரயாய வௌஷட்

நமாம் யகம்– கரதலகர ப்ருஷ்டாப்யாம் நம: – அஸ்த்ராய பட்

பூர்புவஸ்ஸுரோமிதி திக்பந்த:

**த்யானம்**

**மாணிக்யாத்ரி ஸமப்ரபம் நிஜருசா ஸக்ரஸ்த் ரக்ஷோகணம் |**
**ஜானுஸ்த கராம்புஜம் த்ரி நயனம் ரத்ணேல்லஸத் பூஷணம் ||**
**பாஹுப்யாம் த்ருத ஸங்க சக்ர மனிஸம் தம்ஷ்ட்ராக்ரவக்த்ரோல்-லமலத் |**
**ஜ்வால ஜிஹ்வ முதக்ர கேச நிசயம் வந்தே ந்ருஸிம்மம் விபும் ||**

**லமித்யாதி பஞ்சபூஜா**

**மூலமந்த்ரம்**

**ஓம் உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுகம்|**
**ந்ருஸிம்மம் பீஷணம் பத்ரம் ம்ருத்யு ம்ருத்யும் நமாம்யகம் |**

**ஹ்ருதயாதி ந்யாஸ: |**

**த்யானம்**

## லமித்யாதி பஞ்சபூஜா

லம் ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்பயாமி | ஹம் ஆகாசாத்மனே புஷ்பாணி ஸமர்ப்பயாமி |
யம் வாயவ்யாத்மனே தூபமாக்ராபயாமி | ரம் வஹ்ன்யாத்மனே தீபம்தர்ஸயாமி |
வம் அம்ருதாத்மனே அம்ருதம் நிவேதயாமி | ஸம் ஸர்வாத்மேன ஸம்ஸ்தோபசாரன் ஸமர்ப்பாயமி |

## ஜப ஸமர்பணம்

**இஹ்யாதி குஹ்ய கோப்த்ரீத்வம் க்ருஹாநாத் மக்ருதம் ஜபம் ஸித்திர் பவதுமே தேவ த்வத் ப்ரஸாதாத் மயிஸ்திரா**

**|| ஓம் தத்ஸத் ||**

## ஸ்ரீ வராஹ மூல மந்த்ரம்

அஸ்ய ஸ்ரீ வராஹ மந்த்ரஸ்ய | பார்கவ ரிஷி: |
அனுஷ்டப் சந்த: | ஆதி வராஹோ தேவதா!
ஸ்ரீ வராக மூர்த்தி ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக: |

ஓம் ஏக தம்ஷ்ட்ராய – அங்குஷ் டாப்யாம் நம: / ஹ்ருதயாய நம:

ஓம் வ்யோ மோல்காய – தர்ஜனீப்யாம் நம: / சிரஸே ஸ்வாஹா

ஓம் தேஜோதி பதயே – மத்யமாப்யாம் நம: / சிகாயை வஷட்

ஓம் விஸ்வரூபாய – அனாமிகாப்யாம் நம: / கவசாச ஹும்

ஓம் மஹாதம்ஷ்ட்ராய – கனிஷ்டிகாப்யாம் நம: / அஸ்த்ராய பட்

பூர்புவஸ்ஸுரோமிதி திக்பந்த:

**த்யானம்**

**ஆபாதம் ஜானு தேஸாத்வர கண கநிபம் நாபிதேசா ததஸ்தான் |**
**முக்தாபம் கண்ட தேசாத்தருண ரவிநிபம் மஸ்தகாந்நீலபாசம் ||**
**ஈடே ஹஸ்தைர்ததானம் ரத சரண தனர கங்க கேடன கதாக்யஷம் |**
**சக்திம் தான பயேச க்ஷிதி தரண லஸத் தம்ஷ்ட்ரமாத்யம் வராஹம் ||**

**லமித்யாதி பஞ்சபூஜா**

**மூலமந்த்ரம்**

**ஓம் நமோ பகவதே வராஹ ரூபாய பூர்புவ: ஸ்வ:**
**ஸ்தாபதே பூபதித்வம் தேஹ்யதே ததாபய ஸ்வாஹா ।**

**ஹ்ருதயாதி ந்யாஸ: ।**
**பூர்புவஸ்ஸுரோம் இதி திக் விமோக: ।**

**த்யானம்**

**லமித்யாதி பஞ்சபூஜா**

லம் ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்பயாமி । ஹம் ஆகாசாத்மனே புஷ்பாணி ஸமர்ப்பயாமி ।
யம் வாய்வாத்மனே தூபமாக்ராபயாமி । ரம் வன்யாத்மனே தீபம்தர்ஸயாமி ।
வம் அம்ருதாத்மனே அம்ருதம் நிவேதயாமி । ஸம் ஸர்வாத்மேன ஸர்வோபசாரான் ஸமர்ப்பாயமி ।

**ஜப ஸமர்பணம்**

**குஹ்யாதி குஹ்ய கோப்த்ரீத்வம் க்ருகா நாத்ம க்ருதம் ஜபம்**
**ஸித்திர் பவதுமே தேவ த்வத் ப்ரஸாதாத் மயிஸ்திரா**

**॥ ஓம் தத்ஸத் ॥**

**ஸ்ரீ ஹயக்ரீவர் மூல மந்த்ரம்**

அஸ்ய ஸ்ரீ ஹயக்ரீவ மந்த்ரஸ்ய ப்ரும்ம ரிஷி: ।
அனுஷ்டப் சந்த: । ஹயக்ரீவோ தேவதா । ஹம்ஸாம் பீஜம் ।
ஹம்ஸீம் சக்தி: । ஹம் ஸீம் கீலகம் ।
ஹயக்ரீவ ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக: ।

ஹம்ஸாம் – அங்குஷ் டாப்யாம் நம: / ஹ்ருதயாய நம:
ஹம்ஸீம் – தர்ஜனீப்யாம் நம: / சிரஸே ஸ்வாஹா
ஹம்ஸூம் – மத்யமாப்யாம் நம: / சிகாயை வஷட்
ஹம்ஸைம் – அனாமிகாப்யாம் நம: / கவசாச ஹூம்
ஹம்ஸௌ – கனிஷ்டிகாப்யாம் நம: / நேத்ரத்ரயாய வௌஷட்
ஹம்ஸ: – கரதலகரப்ருஷ்டாப்யாம் நம: । அஸ்த்ராய பட் ।

பூர்புவஸ்ஸுரோமிதி திக்பந்த:

**த்யானம்**

**தவல நளின நிஷ்டம் க்ஷீர கௌரம் கராக்ரை: ।**
**ஜப வலய சரோஜே புஸ்தகாபீஷ்ட தானை: ॥**
**ததத மமல வஸ்த்ரா கல்ப தாணாபிராமம் ।**
**துரகவதன விஷ்ணும் நௌமி வித்யார்க விஷ்ணும் ॥**

**லமித்யாதி பஞ்சபூஜா**

**மூலமந்த்ரம்**

**ஓம் ஹயக்ரீவாய நம: ஸ்வாஹா ।**
**ஹ்ருதயாதி ந்யாஸ: ।**
**பூர்புவஸ்ஸுரோம் இதி திக் விமோக: ।**

## த்யானம்

## லமித்யாதி பஞ்சபூஜா

லம் ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்பயாமி । ஹம்
ஆகாசாத்மனே புஷ்பாணி ஸமர்ப்பயாமி ।
யம் வாய்வாத்மனே தூபமாக்ராபயாமி । ரம்
வன்யாத்மனே தீபம்தர்ஸயாமி ।
வம் அம்ருதாத்மனே அம்ருதம் நிவேதயாமி । ஸம்
ஸர்வாத்மேன ஸர்வோபசாரான் ஸமர்ப்பாயமி ।

## ஜப ஸமர்பணம்

**குஹ்யாதி குஹ்ய கோப்த்ரீத்வம் க்ருகா நாத்ம க்ருதம் ஜபம் ஸித்திர் பவதுமே தேவ த்வத் ப்ரஸாதாத் மயிஸ்திரா**

**॥ ஓம் தத்ஸத் ॥**

# ஸ்ரீ ஹநுமத் அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் ஆஞ்சநேயாய நம:
ஓம் மஹாவீராய நம:
ஓம் ஹநுமதே நம:
ஓம் மாருதாத்மஜாய நம:
ஓம் தத்வஞ்ஞாநப்ரதாய நம:
ஓம் ஸீதாதேவி முத்ரா ப்ரதாயகாய நம:
ஓம் அசோகவநிகாச்சேஷத்ரே நம:
ஓம் ஸர்வமாயா விபஞ்ஜநாய நம:
ஓம் ஸர்வபந்த விமோக்த்ரே நம:
ஓம் ரக்ஷோ வித்வம்ஸகாரகாய நம
ஓம் பரவித்யா பரீஹாராய நம:
ஓம் பாப விநாசநாய நம:
ஓம் பரமந்த்ர நிராகர்த்ரே நம:
ஓம் பரயந்த்ர ப்ரபேதகாய நம:
ஓம் ஸர்வக்ரஹ விநாஸிநே நம:
ஓம் பீமஸேந ஸஹாயக்ருதே நம:
ஓம் ஸர்வ துக்கஹராய நம:
ஓம் ஸர்வ லோகசாரிணே நம:
ஓம் மநோஜ்வலாய நம:
ஓம் பாரிஜாத தருமூலஸ்தாய நம:
ஓம் ஸர்வமந்த்ர ஸ்வரூபவதே நம:
ஓம் ஸர்வயந்த்ர ஸ்வரூபிணே நம:
ஓம் ஸர்வதந்த்ராத்மகாய நம:
ஓம் கபீச்வராய நம:
ஓம் மஹாகாயாய நம:
ஓம் ஸர்வரோக ஹராய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் பலஸித்திகராய நம:
ஓம் ஸர்வவித்யாஸம்பத ப்ரதாயகாய நம:
ஓம் கபிஸேநா நாயகாய நம:
ஓம் பவிஷ்யச் சதுராநநாய நம:
ஓம் குமார ப்ரஹ்மசாரிணே நம:
ஓம் ரத்நகுண்டல தீப்தமதே நம:
ஓம் ஸஞ்சலத்வால ஸந்நத்த
லம்பமாந ஸிகோஜ்வலாய நம:
ஓம் கந்தர்வவித்யா தத்வஜ்ஞாய நம:
ஓம் மஹாபல பராக்ரமாய நம:
ஓம் காராக்ருஹ விமோக்த்ரே நம:
ஓம் ச்ருங்கலா பந்தமோசகாய நம:
ஓம் ஸாகரோத்தாரகாய நம:
ஓம் ப்ராஜ்ஞாய நம:
ஓம் ராமதூதாய நம:
ஓம் ப்ரதாபவதே நம:
ஓம் வரநராய நம:
ஓம் கேஸரி ஸுதாய நம:
ஓம் ஸீதாசோக நிவாரணாய நம:
ஓம் அஞ்ஜநாகர்ப ஸம்பூதாய நம:
ஓம் பாலார்க்க ஸத்ருநாஸநாய நம:
ஓம் விபீஷண ப்ரியகராய நம:
ஓம் தஸ க்ரீவ குலாந்தகாய நம:
ஓம் லக்ஷ்மண ப்ராணதாத்ரே நம:
ஓம் வஜ்ரகாயாய நம:
ஓம் மஹாத்யுதயே நம:
ஓம் ராமபக்தாய நம:
ஓம் தைத்யகார்ய விகாதகாய நம:
ஓம் அக்ஷஹந்த்ரே நம:
ஓம் காஞ்சநாபாய நம:
ஓம் பஞ்சவக்த்ராய நம:
ஓம் மஹா தபஸே நம:
ஓம் லங்கிணீ பஞ்ஜநாய நம:
ஓம் ஸ்ரீமதே நம:
ஓம் ஸிம்ஹிகா ப்ராண பஞ்ஜநாய நம:
ஓம் கந்தமாதந சைலஸ்தாய நம:
ஓம் லங்காபுர விதாஹகாய நம:
ஓம் ஸுக்ரீவ ஸசிவாய நம:
ஓம் தீராய நம:
ஓம் சூராய நம:
ஓம் தைத்ய குலாந்தகாய நம:
ஓம் ஸுரார்ச்சிதாய நம:
ஓம் மஹாதேஜஸே நம:
ஓம் ராமசூடாமணி ப்ரதாய நம:
ஓம் காமரூபிணே நம:
ஓம் பிங்களாக்ஷாய நம:
ஓம் வார்திவைநாக பூஜிதாய நம:
ஓம் கபளீக்ருத மார்த்தாண்ட மண்டலாய நம:
ஓம் விஜிதேந்த்ரியாய நம:
ஓம் ராமஸுக்ரீவ ஸந்த்தாத்ரே நம:
ஓம் மஹாராவண மர்தநாய நம:
ஓம் ஸ்படிகாபாய நம:
ஓம் வாகதீஸாய நம:
ஓம் நவ தயாக்ருதி பண்டிதாய நம:
ஓம் சதுர் பாஹவே நம:
ஓம் தீந பந்தவே நம:
ஓம் மஹாத்மநே நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் ஸஞ்ஜீவந நகாஹர்தரே நம:
ஓம் ஸுசயே நம:
ஓம் வாக்மிநே நம:
ஓம் த்ருடவ்ரதாய நம:
ஓம் காலநேமி ப்ரமதநாய நம:

ஓம் ஹரிமர்கட மர்கடாய நம:
ஓம் தாந்தாய நம:
ஓம் ஸாந்தாய நம:
ஓம் ப்ரஸந்நாத்மநே நம:
ஓம் தஸகண்ட மதாபஹ்ருதே நம:
ஓம் யோகிநே நம:
ஓம் ராமகதாலோலாய நம:
ஓம் ஸீதாந்வேஷண பண்டிதாய நம:
ஓம் வஜ்ர தம்ஷ்ட்ராய நம:
ஓம் வஜ்ர நகாய நம:

ஓம் ருத்ரவீர்ய ஸமுத்பவாய நம:
ஓம் இந்திரஜித் ப்ரஹிதாமோக
ப்ரஹ்மாஸ்த்ர விநிவாரகாய நம:
ஓம் பார்த த்வஜாக்ர ஸம்வாஸிநே நம:
ஓம் ஸரபஞ்ஜர பேதகாய நம:
ஓம் தஸ பாஹவே நம:
ஓம் லோகபூஜ்யாய நம:
ஓம் ஜாம்பவத் ப்ரீதி வர்த்தநாய நம:
ஓம் ஸீதாஸமேத ஸ்ரீராம பாத ஸேவா துரந்தராய நம:

ஸ்ரீ ஹநுமதஷ்டோத்தர சதநாமாவளி:

*நாநாவித பரிமள பத்ரபுஷ்பாஞ்சலிம் ஸமர்ப்பயாமி*

# ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர்

*(புலவர் ப. சிகாகிரீசன், புதுக்கோட்டை அதிஷ்டானம்)*

**ஆஞ்சநேய மதி பாடலானனம்**
**காஞ்சனாத்ரி கமநீய விக்ரஹம் ।**
**பாரிஜாத தருமூல வாஸினம்**
**பாவயாமி பவமான நந்தனம் ॥**

பக்திக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்பவர் ஹனுமான். அஞ்சனாதேவியின் மைந்தனாகத் தோன்றியதால் ஆஞ்சநேயர் எனவும் அழைக்கப் படுகிறார்.

இராமகாதையின் நாயகன் இராமனென்றால் ஸுந்தரகாண்ட நாயகனாக விளங்குபவன் ஆஞ்சநேயன். அவனை நினைத்தாலே போதும், எட்டு நலன்கள் நினைப்பவர்க்குக் கிடைக்குமாம். அறிவு, வலிமை, புகழ், தைரியம், அஞ்சாமை, நோயற்றவாழ்வு, சோம்பலின்மை, சொல்வன்மை ஆகியவையே அவ்வெட்டாகும்.

**புத்திர் பலம் யசோ தைர்யம்**
**நிர்ப்பயத்வம் அரோகதா ।**
**அஜாட்யம் வாக்படுத்வம்**
**ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத் ।**

இவ்வாஞ்சநேயனை அடக்கமே உருவாக இருகரம் கூப்பிய நிலையிலும், சஞ்சீவி மலையைத் தூக்கிப் பறந்து செல்லும் நிலையிலும், வலக்கையை உயரே தூக்கி நிற்கும் (வீர ஆஞ்சநேயர்) நிலையிலும், அவரது அர்ச்சா மூர்த்தியை நாம் பல தலங்களிலும், படங்களிலும் பார்க்கிறோம். ஐந்து முகங்களுடன் பஞ்சமுக ஆஞ்சநேயர் என்ற திருநாமத்துடன் அவர் காட்சியளிக்கும் ஸந்நிதிகள் மிகக் குறைவு. அந்த அபூர்வமான ஐந்து முகங்களோடு கூடிய காட்சியை 10 அடி உயரத்தில் ஒரே சிலா விக்ரஹமாக மக்கள் வழிபட ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் ஸங்கல்பத்தின்படி சென்னை ஓம் ஸ்கந்தாஸ்ர–மத்தில் பிரதிஷ்டை செய்ய உள்ளார்கள். இந்த பஞ்சமுக ஆஞ்சநேயரை சிலா விக்ரஹங்களாக 12 அடி உயரத்தில் புதுக்கோட்டை அதிஷ்டானத்திலும் 16 அடி உயரத்தில் கம்பீரமான தோற்றத்தில் சேலம் ஓம் ஸ்ரீஸ்கந்தாஸ்ரமத்திலும் முன்னரே அவர்கள் பிரதிஷ்டை செய்து மக்களுக்கு நல்லுபகாரம் செய்துள்ளார்கள். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதை மூலமந்திரமாகக் கொண்டு அவர்கள் ஆற்றிவரும் தொண்டின் அடுத்து மைல்கல் தான் ஓம் ஸ்ரீஸ்கந்தாஸ்ரமம் சென்னையில் நிறுவப்படவிருக்கும் பஞ்சமுக ஆஞ்சநேயர் சிலா விக்ரஹமாகும்.

தமது பத்துக் கரங்களில் கத்தி, சூலம், மரம், மலை, பாசம், அங்குசம், சின்முத்ரை, பிண்டிபாலம், கட்வாங்கம், குண்டிகை ஆகியவற்றைத் தாங்கிக் கொண்டு, தம்மை வழிபடுவோரின் துயரைத் துடைப்பதில் வல்லவரும், அடியார்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுவதில் முனைப்பு உள்ளவருமான ஐந்து முகங்களைக் கொண்ட பஞ்சமுக ஆஞ்சநேயரைப் போற்றி வணங்குகிறேன் என தியானச்லோகம் கூறுகிறது.

**கட்கம் சூல மஹீருஹா**
**சல மஹாபாசாங்குசான் பாஹுபி:**
**சின்முத்ராம் ப்ருதுபிண்டி பாலமபி**
**கட்வாங்கம் ததா முண்டிகாம் ।**
**பிப்ராணம் ப்ராணாதார்த்தி பஞ்சனபடும்**
**ரம்யைர் முகை:பஞ்சபி:**
**யுக்தம் பக்தஜனேஷ்டதான நிரதம்**
**வீராஞ்சநேயம் பஜே ॥**

இராமாயணம் என்ற மாலையின் ரத்னமாகத் திகழ்பவர் ஆஞ்சநேயர். ராமாயண மஹாமாலா ரத்னம் வந்தேநிலாத்மஜம் எனப் போற்றப்படும் ஆஞ்சநேயர் ஆற்றிய தொண்டுகள், அற்புதங்கள் பலப்பல. நினைக்கவும் அரியதான மாக்கடலை இராமநாம வைபவத்தால் தாண்டி, காற்றும் அனுமதியின்றி உள்ளே புகஇயலாத இலங்கை மாநகரில் புகுந்து அசோகவனத்தில் சிறையிருந்த செல்வியாம் ஸீதாப் பிராட்டியைக் கண்டு, அவள் உயிர்காத்து உயிருக் கிணையான இராமன் அளித்த கணையாழியைக் கொடுத்து கதைக்குத் திருப்பம் கொடுத்த ஆஞ்சநேயனை மனதார வாழ்த்தி, வாயாரப் புகழ்ந்து பிராட்டி 'இன்றென இருத்தி' என்று ஆசியளித்தமை யாலன்றோ இன்றும் சிரஞ்ஜீவியாக ஆஞ்சநேயன் வாழ்கிறான்! இராமநாமம் உள நாளெல்லாம் அவனும் இருப்பான் என்பது திண்ணம்.

**வடிவழகு கொண்ட வானர வீரன்**

கிழக்குத் திசை நோக்கி வானரமுகம், தெற்கு திசை நோக்கி நரஸிம்ம முகம், மேற்கு நோக்கி கருட

முகம், வடக்குத் திசை நோக்கி வராஹ முகம், மேல் நோக்கிக் குதிரை முகம் என ஐந்து முகங்களுடன் காட்சி தரும் இந்த பஞ்சமுக ஆஞ்சநேயர் ஐந்து பெருந்தத்துவங்களின் ஒரு கூட்டாக விளங்குவது இவரது இணையற்ற மஹிமையைக் குறிப்பதாகும்.

வானர முகம் இவரது அறிவாற்றலையும், நரஸிம்ம முகம் பக்தனான பிரஹ்லாதனைக் காக்க விரைந்து வந்த பக்த ரக்ஷகத் தன்மையையும், கருட முகம் வேத வேத்யனான, வேதஸ்தவரூபனான ஸ்ரீமந் நாராயண தத்துவத்தையும், வராஹமுகம் செய்வதற் கரியதான செயலையையும் செய்கின்ற வல்லமை யையும், மேல் நோக்கிய ஹயக்ரீவர் என்னும் குதிரை முகம் ஸகலவித்யைகளிலும் சிறந்து விளங்கும் தன்மையையும் விளக்குவதாகச் சான்றோர் கூறுவர்.

இவரது வரலாறு பல்வேறு புராணங்களில் வெவ்வேறு முறையாகக் கூறப்பட்டுள்ளது. அதனில் ராமருக்கு ஆஞ்சநேயர் பேருதவி ஒன்று புரிந்த வரலாறு சுவையானது. அதுவே பஞ்சமுக ஆஞ்சநேயரின் அவதாரத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது.

இனி பஞ்சமுக ஆஞ்சநேயரின் அவதாரக் கதையை அறிவோம். இராம இராவண யுத்தத்தில் அடுத்தடுத்து தோல்வியே கண்ட இராவணன் பாதாள உலகில் ஆட்சிபுரிந்து வந்த மயில் இராவணனை (மஹிராவணன்) நினைத்தான். அவனும் வரவே உடனே தன் அவல நிலையை இராவணன் சொல்லிப் புலம்பினான். "இராவண! கவலற்க. இராம லக்ஷ்மணர்களை நாளை இரவு சாமர்த்தியமாகத் தூக்கிச் சென்று பாதாள உலகத்தில் உள்ள காளிகாதேவிக்கு பலிகொடுத்து விடுகிறேன். அஞ்சாதே", எனக் கூறிச் சென்றான்.

இதனை ஒற்றர் மூலம் அறிந்த வீடணன் அனுமனிடம் கூற அவனும் இராமலக்ஷ்மணர்களைச் சுற்றித் தன் வாலால் ஒரு கோட்டை அமைத்து கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தான்.

மாயாவியான மயில்ராவணன் திட்டமிட்டபடி அன்றிரவு வீடணவேடம் புனைந்து இராம லக்ஷ்மணர்களை நானும் பாதுகாக்கிறேன் எனக் கூறி வால்கோட்டைக்குள் புகுந்து விட்டான். உள்ளே சென்ற மயில்ராவணன் ராமலக்ஷ்மணர் களை தன் மாயா சக்தியால் பொம்மைகளாக்கி வெளியே வந்தான். இவ்வஞ்சகத்தை ஆஞ்சநேயர் அறிந்தாரில்லை. பாதாளம் சென்ற மயில் ராவணன் பொம்மைகளாக இருந்த ராமலக்ஷ்மணர்களுக்கு சுயரூபம் கொடுத்து சிறைப்படுத்தி விட்டான்.

ஆஞ்சநேயர் வால்கோட்டையமைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்த இடத்திற்கு வந்து கோட்டைக்குள் சென்ற வீடணன் அங்கு இராம லக்ஷ்மணர்களை இல்லாதது கண்டு அதிர்ச்சி யுற்றான். வெளியே வந்து ஆஞ்சநேயனிடம் ராமலக்ஷ்மணர்களின் காணாமை பற்றிக் கூற உடனே அஞ்சநேயர் பாதாள லோகத்திற்கு விரைந்து சென்றார். ராமலக்ஷ்மணர்களை பலி கொடுக்கப் போகும் காளிகோவிலுக்குச் சென்று காளியின் விக்ரஹத்திற்குப் பின்னால் மறைந்து கொண்டார்.

அன்றிரவு மயில்ராவணனும் (மஹிராவணன்) அவன் சகோதரன் அஹிராவணனும் இராம லக்ஷ்மணர் களைப் பலியிட காளிகோவிலுக்குக் கொண்டு வந்தனர். அவர்களுள் ஒருவரே ஒரு நேரத்தில் உள்ளே செல்ல வேண்டுமென்பது விதி. அதனால் அஹிராவணன் ராமலக்ஷ்மணர்களை அழைத்துக் கொண்டு உள்ளே செல்ல, ஆஞ்சநேயர் யாரும் எதிர்பாராத வண்ணம் கோயில் கதவுகளை மூடித் தாளிட்டு விட்டார். காளியின் குரலில் ஆஞ்சநேயர் 'மயில் ராவணா' அஹிராவணன் மட்டும் பலி கொடுக்கட்டும்; நீ உள்ளே வரவேண்டாம், என்று கூறி அஹிராவணனை அடித்துக் கொன்றுவிட்டு, தான் கொண்டு வந்திருந்து வில், அம்பு முதலான ஆயுதங்களைக் கொடுத்து மயில்ராவணனுடன் போர் செய்ய ஆயத்தப்படுத்தினார்.

தன் உடன் பிறந்தான் நீண்ட நேரமாகியும் வெளி வராதிருக்கவே சந்தேகம் கொண்டு கதவைத் தட்ட மூவரும் வெளிவந்தனர். இப்போது ஆஞ்சநேயர் விசுவரூபம் எடுத்துக் கொண்டு இராம லக்ஷமணர் களைத் தன் தோளில் தூக்கிக் கொண்டு வெளி கொண்டு வந்து விட்டார். போர் தொடங்கியது. வீடணன் முன் கூறியபடி அவன் இருக்குமிடம் செல்ல மயில் ராவணன் உயிர் வெளியே ஓரிடத்தில் இருப்பதை அனுமனுக்கு உணர்த்தினான். உடனே 'தூங்கற்க தூங்காது செய்யும் வினை' என்ற கூற்றுக்கேற்ப மிக விரைவாக ஏழ்கடலையும் தாண்டி கடைசிக் கடலின் நடுவில் அக்நிமயமான தாமரை மலரின் மையத்தில் உள்ள தண்டின் வழியாக சூக்ஷ்மமான வடிவம் எடுத்துக் கொண்டு உள்ளே சென்று அங்கிருந்த குகையை அடைந்தார். அங்கு காவலுக்கிருந்த அரக்கர்களை அழித்து மயில் ராவணன் உயிர் இருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு பாதாள உலகம் வந்தார்.

பெட்டியில் மயில் ராவணின் பஞ்சப்ராணன்களும் ஐந்து வண்டுகளாக இருந்தன. அவற்றை ஒரே

நேரத்தில் கொன்றால் தான் மயில் ராவணன் மாய்வான். அவற்றில் ஒன்று தப்பிவிட்டாலும் அவனைக் கொல்ல இயலாது என்பது பிரம்மாவின் வரமாகையால் புத்திசாலியான ஆஞ்சநேயன் ஐந்துமுகங்களை எடுத்துக் கொண்டு பஞ்சமுக ஆஞ்சநேயனான்.

தன் உயிர் பாதுகாப்பாக இருந்த பெட்டி அனுமனிடம் இருப்பது கண்டு மயில் ராவணன் அதிர்ந்தான். ஆஞ்சநேயன் பெட்டியைத் திறந்து வண்டுகள் பறந்தோடிவிடாமல் ஒரே நேரத்தில் ஐந்து முகங் களாலும் ஒவ்வொரு முகத்தாலும் ஒவ்வொரு வண்டைக் கடித்துக் குதறித் துப்பினார். உலகுக் கெல்லாம் பெருநோயாக இருந்த மயில்ராவணன் வண்டுகள் மாய அவனும் மாய்ந்தான்.

பிராணத் தியாகம் செய்யவிருந்த ஸீதாப் பிராட்டியை இராமனின் கதை கூறி, கணையாழி கொடுத்த பெருமை, பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடிந்து மறுநாள் உதயகாலத்தில் இராமனுடைய வருகையைக் காணாது பிரதிக்ஞை செய்தபடி தீப்புக இருந்த தம்பி பரதனைக் காப்பாற்றிய பெருமை ஆகிய இரண்டினும் மேலாக இராம லக்ஷ்மணர்களைப் பேராபத்திலிருந்து காத்த ஆஞ்சநேயனின் திறமையை என்னென்பது!

அதற்காகவே எடுத்த அவதாரமே பஞ்சமுக ஆஞ்சநேயர் என்பதை அறியும் போது அவதாரச் சிறப்பும், அந்த பஞ்சமுக ஆஞ்சநேய வழிபாட்டுச் சிறப்பும் நமக்கு நன்கு புலனாகிறது.

இவ்வளவு பெருமை மிக்க பஞ்சமுக ஆஞ்சநேயரை சென்னை ஓம் ஸ்ரீஸ்கந்தாஸ்மரத்தில் 10 அடி உயரத்தில் ஒரே சிலா விக்ரமாக அமைத்து பிரதிஷ்டை செய்ய உள்ளார்கள்.

பஞ்சமுக ஆஞ்சநேயர் தியான சுலோகங்கள், தியான மந்திரங்கள், அன்றாடம் உச்சரிக்கும் சுலோகங்கள் பல.

**அஞ்சிலே ஒன்று பெற்றான்**
**அஞ்சிலே ஒன்றைத் தாவி**
**அஞ்சிலே ஒன்றாறாக ஆரியர்க்காக வேகி**
**அஞ்சிலே ஒன்று பெற்ற**
**அணங்கைக் கண்டு அயலாரூரில்**
**அஞ்சிலே ஒன்றை வைத்தான்**
**அவன் நம்மை அளித்துக்காப்பான்**

என்று கம்பர் பாடிப் பரவிய வண்ணம் நாமும் பஞ்சமுக ஆஞ்சநேயரைத் துதித்து நலம்பல பெறுவோமாக.

# ஸ்ரீ ஆஞ்சநேய வைபவம்

*(‘ஆஞ்சநேயதாஸ’ ‘திவ்யகதா ரத்ன’ ஸ்ரீ R. ஜவந்திநாதன்)*

## ஹநுமத் த்வாதச நாமம்

**ஹநுமான் அஞ்ஜநா ஸூநுர் வாயு புத்ரோ மஹா ப$^{3}$ல:**
**ராமேஷ்ட: பல்கு$^{3}$ன ஸக: பிங்கா$^{3}$க்ஷோ மித விக்ரம: I**
**உத$^{3}$தி$^{4}$க்ரமண : சைவ ஸீதா ஸோக விநாஸந:**
**லக்ஷ்மண: ப்ராண த$^{4}$ாதா த$^{3}$ஸக்$^{3}$ரீவஸ்ய த$^{3}$ர்ப்பஹர II**

இந்தப் பன்னிரண்டு நாமாக்களையும் இரவில் தூங்கப்போகும் போதும், காலையில் எழுந்திருக்கும் போதும் உச்சரித்தால் நிச்சயம் ஹநுமான் நமக்குத் துணையிருப்பார்.

1. ஹநுமான்
2. அஞ்சனை மைந்தன்
3. வாயு குமாரன்
4. மஹாபலசாலி
5. ராமனுக்குப் ப்ரியமானவன்
6. அர்ஜுனனுக்கு ஸ்நேகிதன்
7. மஞ்சள் நிறக் கண்களையுடயவன்
8. மிகுந்த பராக்ரமம் வாய்ந்தவன்
9. கடலைக் கடந்தவன்
10. ஸீதையின் சோகத்தைப் போக்கினவன்
11. லக்ஷ்மணனுக்கு உயிர் கொடுத்தவன்
12. ராவணன் திமிரைக் களைந்தவன்

## “ஸ்ரீ ஆஞ்சநேய வைபவம்”

“யத்ர யத்ர ரகு நாத கீர்த்தனம் தத்ர தத்ர கிருதமஸ்த காஞ்சலிம்
பாஷ்பவாரி பரி பூர்ண லோசனம் மாருதிம் நமத நாக்ஷஸாந்தகம்”

“இப்புவியில் எங்கெல்லாம் ராமநாமம் ஒலிக்கிறதோ, எங்கெல்லாம் ராமபிரானின் புகழ் பாடப்படுகிறதோ அங்கெல்லாம் ஆஞ்சநேயன் கண்களில் ஆனந்த பாஷ்பத்துடன் களி நர்த்தனமாடிக் கொண்டு எல்லாருக்கும் அருளை வாரி வழங்குகிறார்” என்பது சத்திய வாக்கு.

ஆஞ்சநேயன் இப்பூவுலகத்தில் இன்றும் நம்முடனே வாழ்ந்து வரும் பரப்ரம்மம். பரமஹம்ஸ பரிவ்ராஜக, ஸ்ரீ மதுசூதன ஸரஸ்வதி ஸ்வாமிகள் மூவரைத்தான் “ஞானி, பரப்ரம்மம்” என்று கூறுகிறார். பற்றற்ற முழுவதும் துறந்த நிஷ்காம்ய பக்தர்கள் என்று “ப்ரஹ்லாதன், அனுமன், கோபிகைகள்” என்ற மூவரைக் குறிப்பிடுகிறார். இதில் சிகரமாய் விளங்குபவர் அனுமன்.

ஸ்ரீராமபிரான் கடைசியில் தனக்கு பட்டாபிஷேகம் நடந்தேறியபோது பரிசு ஒன்றும் விரும்பாத ஆஞ்சநேயனைப் பார்த்து “ஆஞ்சநேயா, என் கதை இந்த பூமியில் எவ்வளவு காலம் சொல்லப்படுகிறதோ அதுவரை உன் புகழும் மேலோங்கி நிற்கும். நீயும் அவ்வளவு காலம் இங்கே வாழ்வாய். நீ எனக்குச் செய்த சேவைக்கு மூவுலகங்களையும் கொடுத்தாலும் ஈடு ஆகாது. என்னையே கொடுத்தாலும் மீண்டும் என்றும் கடனாளியாகத் தான் இருப்பேன். நீ விரும்பும் எதையும் எப்போதும் நிறைவேற்றி வைப்பேன்” என்று உறுதிமொழி அளித்தார்.

இவ்வாறு ஆஞ்சநேயனுக்குப் பிரதி உபகாரம் செய்ய முடியாத நிலையில் ஸ்ரீ ராமரும் சீதையும் தங்களையே கடன் பட்டவர்கள் ஆக்கிக் கொண்டனர். இப்படிப்பட்ட ஓர் தனிப் பெருமையும் புகழும் ஆஞ்சநேயனுக்குத்தான் உண்டு.

எந்தக் கோவிலானாலும் அதில் ஓர் மூலையில் ஆஞ்சநேயர் ராமத் தியானத்தில் அமர்ந்திருப்பார். இக்கலியுகத்தில் பிரத்யக்ஷயாய்க் காட்சி அளித்து எல்லாருக்கும் எளிதில் அருள் வழங்குபவர். கலியின் உபாதைகளை நீக்கி சகல க்ஷேமங்களையும் கொடுக்கும் திவ்ய வரப்ரஸாதி. ராமர் தன் அவதாரம் முடிந்து பரிவாரங்களுடன் வைகுண்டம் சென்ற பின்பும் சிரஞ்சீவியாக இங்கேயே தங்கி ப்ரகாசித்துக் கொண்டிருப்பவர்.

நல்ல புத்தி, பலம் தேஜஸ், தைர்யம், நிர்ப்பயம் ரோகமின்மை, மனக்கிலேசமற்ற தன்மை, வாக்கு சித்தி எல்லாவற்றையும் அளிக்கவல்லவர் ஆஞ்சநேயர். ராமரும், சீதையும் என்றும் அவரிடம் வாசம் செய்து கொண்டு நாடி வரும் பக்தர்களுக்கு சகல கார்ய சித்தியையும் வழங்குகிறார்கள் என்பது நிச்சயம்.

## அனுமனின் அவதாரம்

அனுமனின் வரலாறு நமக்கு அகஸ்தியர் வாயிலாகக் கிடைக்கிறது. சாக்ஷாத் பரமேச்வரரின் அம்சம் என்றும் விஷ்ணுவின் அவதாரமாகிய ராமபிரானுக்குக் கைங்கர்யம் செய்யவே அனுமனாக வந்தார் என்றும் தெரிகிறது.

ஒரு சமயம் சிவனும் பார்வதியும் திருப்பதி மலையில் வானர ரூபங்கொண்டு உல்லாசமாக அங்கே உள்ள ஏராளமான வானரங்களுடன்

சஞ்சாரம் செய்தார்கள். பகவான் பக்தர்களுக்கு அவர்கள் ரூபத்திலேயே வந்து அருளுவது அவன் தனிச்சிறப்பு.

அப்போது சிவபெருமானின் தேஜஸ் ஒளியானது ஓங்கி வீசிப்பரவுகிறது. அங்கிருந்த வாயு பகவான் அந்தத் தேஜஸைத் தாங்கிச் சென்று ஒரு நல்ல இடத்தில் சேர்க்க எண்ணிப் புறப்பட்டான்.

சுமேரு பர்வதத்தின் அரசனான கேஸரி என்ற குரங்கு தன் மனைவியான அஞ்சனாதேவியைத் தனிமையில் விட்டு விட்டு சம்பராசுரன் என்ற அரக்கனுடன் போர் செய்யச் சென்றிருந்தான்.

அஞ்சனாதேவி அச்சமயம் தன் சுய ரூபமான மானிட வடிவத்தை எடுத்துக் கொண்டு சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். அவளைக்கண்ட வாயு பகவான் தான் தாங்கி வந்த சிவ தேஜஸை அவளிடம் சேர்ப்பித்தான். அஞ்சனாதேவி பயந்தபோது வாயு பகவான் அவளுக்கு அபயம் அளித்து ''அஞ்சனாதேவி, கவலைப்படாதே, உன் கணவன் தேவர்களுக்குப் பல உதவிகளைச் செய்துள்ளான். அதன் பிரதி பலனாக நான் உனக்கு மூவுலகத்திலும் புகழ்மிக்க ஒரு புத்திரன் உண்டாக அனுக்ரஹம் செய்கிறேன். அவன் கீர்த்தி என்றும் அழியாது'' என்று ஆசீர்வதித்தார்.

ஸ்காந்த புராணத்திலும் அனுமன் பரமேச்வரனின் 11–வது ருத்ரர் ஆவர் எனப்படுகிறது.

எனவே அஞ்சனாதேவி பக்கத்துக் குகையில் ஒரு அழகான ஆண் மகவைப் பெற்றாள். அதற்கு ''சுந்தரன்'' எனப் பெயரிட்டார். இதுதான் அனுமனின் மூலப்பெயர். வால்மீகி முனிவரும் அனுமன் வரலாறு கூறும் காண்டத்திற்குச் ''சுந்தர காண்டம்'' என்றுதான் பெயரிட்டார்.

அனுமன் பிறந்தது மார்கழி மாதம் மேஷலக்னம், சுக்ல பக்ஷம், சதுர்த்தி ஸ்வாதி நக்ஷத்ரம், (சிலர் மூலம் என்று அனுஷ்டிக்கிறார்கள்).

## அனுமன் பெற்ற வரங்கள்

''காஞ்சனாத்ரி கமனீய விக்ரகம்'' என்று அனுமனைச் சொல்கிறோம். பொன்னிறத்தில் சிறிது பச்சைச் சாயலும் சேர்ந்தது போன்ற உருவம் என்பார்கள். அதாவது முதிர்ந்த தானியத்தில் சிறிது பச்சை நிறம் நுனியில் இருப்பது போன்றது என்று கூறுவார்கள்.

வாயுகுமாரனாதலால் மகாமேரு போன்ற பலமுள்ள தேகம். எங்கும் பறந்து செல்லும் ஆற்றலும் சேர்ந்திருந்தது.

அனுமன் பால ப்ராயத்தில் சூரியனைப் பார்த்து பழம் என்று நினைத்து அதைக் கவர்ந்து வர ஆகாயம் நோக்கி விரைந்தான். பசியினால் அவன் சென்ற வேகத்தைக் கண்டு தேவர்கள் பயந்தனர். அப்போது சூரிய கிரஹணம் உண்டாகும் வேளை. ராகு சூரியனை நோக்கி வந்து கொண்டிருந்தான். அனுமன் அதைத் தடை செய்ய, ராகு இந்திரனிடம் சென்று முறையிட்டான்.

இந்திரனும் அனுமனின் தகாத செயலைக் கண்டிக்கும் பொருட்டுத் தன் வஜ்ராயுதத்தால் அனுமனின் முகவாய்க் கட்டையில் அடிக்க அனுமன் மூர்ச்சையாகக் கீழே விழுந்தான். வஜ்ராயுதத்தால் அடிபட்டதில் ஒரு பக்கம் முகவாய் வீங்க கீழே வீழ்ந்ததில் மற்றொரு பக்கமும் வீங்க ஆஞ்சநேயன்அனுமன் என்ற பெயரைத் தாங்கினான். (அனு என்றால் முகவாய்).

தன் குமாரனுக்கு இவ்வாறு கதி ஏற்பட்டதைக் கண்டு வாயு பகவான் மிகுந்த கோபம் கொண்டு அனுமனைத் தூக்கிக்கொண்டு ஓர் குகைக்குள் சென்று தன் சக்தியை ஒடுக்கிக் கொண்டான்.

வாயுவின் வியாபகம் இல்லாததால் அகில உலகமும் ஸ்தாவித்து விட்டது. அண்ட சராசரங்களும் உயிரற்றுப் போயின.

உடனே இந்திரன், ப்ரம்மா உள்ளிட்ட சகல தேவர்களும் வாயுவிடம் வந்து முறையிட்டு அவரைச் சமாதானம் செய்தார்கள். அனைவரும் அனுமனுக்கு ஆசிகள் வழங்கினார்.

ப்ரம்மா கமண்டலத்திலிருந்து நீரை எடுத்துத் தெளித்து அனுமனை உயிர்ப்பித்தார். தீர்க்க ஆயுள் வாழ ஆசீர்வதித்தார். அனுமன் இஷ்டப்படி உருவம் எடுக்கவும் எங்கே வேண்டுமானாலும் சஞ்சாரம் செய்யவும் வரம் அளித்தார்.

சங்கரன் பிரம்ம தண்டத்தால் ஆபத்து ஏற்படாது என்றார்.

சூரிய பகவான் அனுமனுக்கு உரிய காலத்தில் எல்லாக் கலைகளையும் சகல சாஸ்திரங்களையும் போதிப்பதாகவும் அனுமனுக்குச் சமமாக யாரும் இல்லை என்று கூறும்படி அவனை பாண்டித்யம் பெற உதவுவதாகவும் சொன்னார்.

வருண பகவான் தண்ணீரால் ஆபத்து இல்லை என்றும் அக்னி பகவான் நெருப்பால தீங்கு ஏற்படாது என்றும் அனுக்ரஹித்தார்கள்.

யமன், யமதண்டத்தால் கெடுதல் வராது என்றும், குபேரன் செல்வம் ஆயுதங்கள் முதலியவை

கொடுத்தும் உதவினார்கள்.

இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் எந்த உபாதையும் நேராது என்றார். வஜ்ரம் போன்ற தேகத்தையும் அனுமனுக்கு அளித்தார். மேலும் ஒரு மாலையையும் அனுமனுக்கு அளித்தார்.

இவ்வாறு பல வரங்களைப் பெற்ற யாராலும் ஈடு கொடுக்க முடியாதபடி பிரமிக்கத்தக்க பலத்தைப் பெற்றான் அனுமன். இதனால் பிரமிக்கத்தக்க பல அரிய செயல்களை அனுமன் சுலபமாகவே செய்து முடித்தான்.

## அனுமனின் தனிப் பெருமை

சீதா தேவியிடமிருந்து பெற்று வந்த சூடாமணியை அனுமன் ராமரிடம் கொடுத்து, அவள் ராமரை நினைந்து நினைந்து உருகுவதையும் தான் இலங்கையில் கண்ட மற்ற விபரங்களையும் சொன்னான்.

ராமர் கண்களில் ஆனந்த பாஷ்பம் சொரிய அனுமனைக் கட்டித் தழுவினார்.

"நான் ஒரு தீனன். உனக்குக் கைம்மாறு செய்ய இயலாத கீழ்நிலையில் இருக்கிறேன். உனக்குத் தகுந்த பிரதி உபகாரம் என்னால் செய்ய இயலாது. என்னையே உனக்குத் தருகிறேன்" என்று சொல்லி அனுமனை ராமர் அணைத்துக் கொண்டார். இந்தப் பெருமை வேறு யாருக்கும் கிட்டாதது. (சீதையைத் தவிர)

சீதாப் பிராட்டியும் ராமரிடமிருந்து அனுமன் கொண்டு வந்த கணையாழியைப் பெற்றுக் கொண்டவுடன் கண்களில் நீர் ஊற்றுப் பெருக, "அனுமனே, நீ இன்று போல் என்றும் சிரஞ்சீவி யாய் இருப்பாய். எனக்கு உயிரளித்த மகானு பாவன் நீ. உனக்கு என்னால் பிரதி உபகாரம் செய்ய முடியாமல் இருக்கிறேன்" என்று அனுமனை வாழ்த்தினாள்.

ஏனைய மற்ற பக்தர்கள் யாவரும் பீஷ்மர் பிரஹ்லாதன், துருவன் போன்ற பக்த சிரேஷ்டர் களும் பல சோதனைகளுக்கு உட்பட்டு கடைசி யில் பகவானால் காப்பாற்றப்பட்டு சிறப்படைந் தார்கள்.

ஆனால் அனுமனோ பகவானும் பிராட்டியும் மற்றவரும் சோதனைக்குட்பட்டு கஷ்டத்தில் தவிக்கும்போது அவர்களைக் காப்பாற்றினான்.

பலன் எதிர்பாக்கவுமில்லை. பெற்றுக்கொள்ளவும் இல்லை. அனுமன் ஒரு அதிசயமான, வித்தியாச மான உத்தம பக்தன். சேவை ஒன்றுதான் தெரியும். தன்னலம் அற்றவன். மிக எளியவன். பண்பின் சிகரம்.

## அனுமனின் ஒப்பற்ற சேவை

ஸ்ரீ ராமபிரானின் குடும்பமும் ஏன், குலமும் அனுமனுக்கு கடன்பட்டுள்ளது.

சீதாதேவி அசோகவனத்தில் இறக்கத் தீர்மானிக் கையில் அவள் உயிரைக் காப்பாற்றினான்.

ராம லக்ஷ்மணர்கள் மூர்ச்சையாய் வீழ்ந்து கிடந்த போது சஞ்சீவி கொண்டுவந்து அவர்களைக் காப்பாற்றினான்.

லக்ஷ்மணனை இரண்டாம் தடவையும் ராவணனிட மிருந்து காப்பாற்றினான்.

பரதன் நெருப்பில் விழ யத்தனிக்கும் போது அவனை நிறுத்திக் காப்பாற்றினான்.

பரதன் இறந்திருந்தால் சத்ருக்னன் உயிர் விட்டிருப்பான். ராம லக்ஷ்மணர்கள் வராவிட்டால் கௌசல்யா முதலானோர் உயிரை விட்டிருப்பார்கள்.

இப்படி அனைவரும் சந்தோஷமாக சுகமாக வாழ அனுமன் தான் காரணம்.

ராமாயணத்தின் பாத்திரங்களில் அனுமன் ஒரு திலகம், தன்னலமற்ற சேவா ரத்னம். ராம சீதா அருளுக்கும் அன்புக்கும் என்றும் உரியவன்.

**"ஈரேழு ஜகதொளு இன்னுமத்தே யாரு சரி நினகே அனுமந்தா"**

"ஈரேழு புவனங்களிலும் உனக்கு சரிநிகர் யாருளர்?" என்று புரந்தரதாஸர் பாடுகிறார்.

ராம பட்டாபிஷேகம் முடிந்து எல்லாருக்கும் ராமர் பரிசுகளை வழங்கினார். ஓர் முத்து மாலையை சீதாதேவிக்குக் கொடுத்து அவள் பிரியப்பட்ட வரிடம் கொடுக்கச் சொன்னார். சீதையும் சந்தோஷத்துடன் அனுமனுக்கு அதைக் கொடுக்க அவன் அந்த மாலையைக் கடித்து ருசிபார்த்து எறிந்தான்.

ராம நாம ருசி அந்த மாலையில் இல்லை என்று நினைத்தான்.

**"ஓ ராம! நீ நாம ஏமி ருசிரா"** என்று பத்ராசல ராமதாஸர் பாடுகிறார்.

**"ராம மந்த்ரவ ஜபிஸோ ஆ மந்த்ர ஈமந்த்ர மெச்சி கெடபேடா"** என்று புரந்தர தாஸன் கூறுகிறார்.

**"கஹத கபீரா ஜோமுக ராமநஹீ வஹமுக தூல பரி"**

"எவன் வாயில் ராம நாமம் இல்லையோ அவன்

வாயில் மண்ணைப் போடு'' என்று கபீர்தாஸ் கர்ஜிக்கிறார்.

ராமர் தன் அவதார முடிவில் சகல பரிவாரங்களுடன் வைகுண்டம் செல்லும் போது அனுமன் இங்கேயே தங்கிவிட எண்ணியதால் ராமர் ஒன்றும் செய்ய முடியவில்லை. வைகுண்டத்தில் ராம நாமம் இல்லை என்பதால் அனுமன் இங்கேயே தங்கினான்.

ராமர் அனுமனை நோக்கி ''உன் விருப்பப்படியே நீ இங்கேயே என்றும் வாழ்வாய். உனக்கு எல்லா சிறப்புகளும் உண்டாகட்டும். நானும் என்னைச் சார்ந்தவர்களும் என்றும் உனக்குக் கடன் பட்டுள்ளோம். உன் விருப்பங்களை எப்போதும் நான் நிறைவேற்றி வைப்பேன்'' என்றார்.

அனுமன் ராமரைப்பிரிய இசைந்தான். ஆனால் ராம நாமத்தைப் பிரிய இசையவில்லை.

**''நின்யாகோ நின்னகங்யாகோ நின்ன நாமத பல ஒந்தித்தரே சாகு''**

(கிருஷ்ணா நீ போகலாம். உன் நாமத்தின் பலன் ஒன்றே போதும் என்று புரந்தரதாஸர் அனுமனுடைய கருத்தையே பிரதிபலிக்கிறார்).

கலியுகத்தில் வாழ்ந்து வரும் ப்ரத்யக்ஷ தெய்வமான ஆஞ்சனேயர் பக்தர்கள் கோரும் வரங்களை அவ்வப்போது அளித்துவரும் வரப்ரசாதி.

ஸ்ரீ ராமஜயம் என்னும் சொல்லுக்கு வடிவம் கொடுக்கும் உத்தம பக்த சிகாமணி.

**வீர மாருதி கம்பீர மாருதி**
**கான மாருதி ராம கான மாருதி**
**தாஸ மாருதி ராம தாஸ மாருதி**
**பக்த மாருதி ராம பக்த மாருதி**
**ஜய் ஹனுமான்! ஜய் ஹனுமான்! ஜய் ஜய் ஹனுமான்!!**